**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 13/2020 |
| Name | : | Murugadass |
| P.W. | : | 1 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.02.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பெருமாள் புதுாரில் வசிக்கிறேன். தனியார் நிறுவனத்தில் காவலாளியாக வேலை செய்கிறேன். 23.08.2017 ம் தேதி மதியம் 03.30 மணிக்கு நான் இரவு பணி முடிந்து ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தேன். எனது மனைவி நாகலட்சுமி எங்கள் மகளை பள்ளியில் இருந்து அழைத்து வர சென்றார். பக்கத்து வீட்டில் உள்ள வள்ளியம்மாள் என்பவர் சேவல் இறந்துவிட்டது பற்றி கேட்டதற்கு அதற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்று என் மனைவி சொல்லிக்கொண்டிருக்கும் போது எனது மனைவியின் எதிரி அண்ணன் கண்ணையன் அங்கு வந்து தேவடியா என்று கெட்ட வார்த்தையால் திட்டி வள்ளியம்மாள் வீட்டு கதவின் நடுவில் வைத்து கழுத்தை நெறித்தார் சத்தம் கேட்டு நான் ஓடி வந்தேன் எனது காலை பிடித்து கீழே தள்ளிவிட்டு கீழே கிடந்த கருங்கல்லை எடுத்து எனது தலை மற்றும் இடது கண்ணில் அடித்தார். எனக்கு தலையில் இருந்து ரத்தம் வந்தது. போக்கு வண்டி மூலம் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். நாங்கள் இருவரும் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தோம். நான் மருத்துவமனையில் இருந்து போலீசார் என்னை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம்

காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரி வழக்கறிஞர் ஆஜரில்லை என்பதால் நீதிமன்றத்தால் amicus curiae திரு.செல்வக்குமார் Ms No.2921/2009 நியமிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டது**

(1) எனக்கு அந்த சமயத்தில் காவலாளி பணியில் வார விடுமுறை கிடையாது. இரவு 07 முதல் காலை 07 மணி வரை பணி நேரம். அந்த சமயத்தில் இரவுப் பணியில் இருந்தேன். எதிரிக்கும், எனக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. எதிரி தனது தங்கையை ஏன் அடித்தார் என்றால் அவர்கள் குடும்பத்தில் பிரச்சனை இருந்தது. எனது மாமனார் மற்றும் மாமியாரை கவனிக்க நான் அவர்கள் வீட்டில் தங்கியிருந்தால் முன் விரோதம் இருந்தது. முன் விரோதம் காரணமாக நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி தானாக கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தைக் கொண்டு எதிரியால் ஏற்பட்டது என்று பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு 03.30 மணி அளவில் சென்றேன். சம்பவம் ½ மணி நேரம் நடந்தது. சம்பவம் 23.08.2017 ம் தேதி நடந்தது. 24.08.2017 ம் தேதி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.. DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.05 17:56:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 13/2020 |
| Name | : Nagalakshmi |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.02.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சங்கம்பாளையத்தில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரி எனது அண்ணன். 2017ம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. மதியம் 03.30 மணி அளவில் எனது மகளை அழைக்கச் சென்ற போது பக்கத்தில் வீட்டில் உள்ள வள்ளியாத்தாள் சேவல் இறந்துவிட்டது வந்து எடுத்துப்போ என்று சொன்னார். நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். அப்போது மேற்கில் இருந்து மது போதையில் வந்த ஆஜர் எதிரி தேவடியா கிட்ட உனக்கு என்ன நியாயாம் என்று சொல்லி திட்டி என்னை கதவு சந்தில் வைத்து கழுத்தை அழுத்தினார் தாலியை பிய்த்து போட்டுவிட்டார். சத்தம் கேட்டு வந்த எனது கணவரை காலை பிடித்து கீழே தள்ளி கல்லை எடுத்து தலையில் அடித்துவிட்டார். கெட்ட வார்த்தைகளால் திட்டினார். எனது கணவருக்கு தலை உடைந்தது. அருகில் உள்ளவர்கள் ஓடி வந்தார்கள். உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று எதிரி மிரட்டினார். நாங்கள் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) எனது சொந்த ஊர் சங்கம்பாளையம். சம்பவ சமயத்தில் பெருமாள் புதுாரில் தான் வசித்தோம். எனக்கும், எதிரிக்கும் இடையே என்ன பிரச்சனை என்றால் எனது அப்பா இறந்துவிட்டார் எனது அம்மாவை பார்க்க ஆள் இல்லாததால் எனது அம்மாவை பார்த்துவிட்டு அவருடன் இருந்தோம் அதனால் எனது அண்ணன் உடன் பிரச்சனை ஏற்பட்டது. எனக்கும், எதிரிக்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.05 17:56:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்